# முதல் இடைப் பருவத் தேர்வு – 2024

## ஏழாம் வகுப்பு

**நேரம்: 1.30 மணி** **கணிதம்** **மதிப்பெண்கள்:50**

### பகுதி – I

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5x1=5

1. (-100) - 0 + 100 = ______
   (i) 200 (ii) 0 (iii) 100 (iv) -200
2. பின்வரும் எந்த செயலியில் முழுக்களின் தொகுப்பு 'அடைவுப் பண்பை' பெறாது ?
   (i) கூட்டல் (ii) கழித்தல் (iii) பெருக்கல் (iv) வகுத்தல்
3. அடுத்துள்ள பக்கங்கள் முறையே 6 செமீ மற்றும் 5 செமீ கொண்ட இணைகரத்தின் சுற்றளவு
   (i) 12 செமீ (ii) 10 செமீ (iii) 24 செமீ (iv) 22 செமீ
4. –7mn என்னும் உறுப்பின் எண்கெழு
   (i) 7 (ii) -7 (iii) P (iv) -P
5. ஒரு புள்ளியில் அமையும் அனைத்துக் கோணங்களின் கூடுதல்
   (i) 360° (ii) 180° (iii) 90° (iv) 0°

### பகுதி – II

**II கோடிட்ட இடத்தை நிரப்புக:** 5x1=5

6. (-5) + ______ = -100
7. 100 x ______ = -500
8. இணைகரத்தின் பரப்பளவு காணும் சூத்திரம் ______
9. 2y - 6 என்னும் கோவையின் மாறிலி உறுப்பு ______
10. 3ab + 4c - 9 என்னும் கோவையில் மொத்தம் ______ உறுப்புகள் உள்ளன.

### பகுதி – III

**III சரியா / தவறா எனக் கூறுக:** 5x1=5

11. (–32) இன் கூட்டல் எதிர்மறை (–32)
12. 15–(–18)க்கு 15+18 சமமானது
13. (-15) x 5 = 75
14. (-64) ÷ (-64) is 0
15. 2pq, -7qp ஆகியன ஒத்த உறுப்புகளாகும்.

### பகுதி – IV

**IV ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி** 5x2=10

16. எண்கோட்டினைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் முழுக்களின் கூடுதல் காண்க.
    10 மற்றும் –15
17. பெருக்கற் பலனைக் காண்க.
    (-35) x 22
18. காஷ்மீரில், ஒரு நாள் இரவின் வெப்பநிலை –5°c மறுநாள், அவ்வெப்பநிலை 9°c ஆக உயர்ந்து எனில், அதிகரித்த வெப்ப அளவினைக் காண்க.
19. அடிப்பக்கம் 18 செமீ உயரம் 5 செமீ அளவுள்ள இணைகரத்தின் பரப்பளவு காண்க.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



20. படத்தில் உள்ள சாய்சதுரத்தின் பரப்பளவுக் காண்க.




21. பின்வருவனவற்றுள் ஒத்த உறுப்புகளை வகைப்படுத்துக.
    7x, 5y, -8x, 12y, 6z, z, -12x, -9y, 11z
22. விடுபட்ட கோணத்தைக் காண்க.




## பகுதி – V

**V ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி** 5x5=25

23. கபிலன் தன்னிடம் 10 பென்சில்களை வைத்திருந்தார். அதில் 2 பென்சில்களைச் செந்திலுக்கும் 3 ஐக் கார்த்திக்கும் கொடுத்துவிட்டார். மறுநாள் அவருடைய தந்தை மீண்டும் 6 பென்சில்கள் தருகிறார். மொத்தப் பென்சில்களிலிருந்து 8 பென்சில்களை அவருடைய தங்கைக்குக் கொடுத்தால் அவரிடம் மீதம் உள்ள பென்சில்களின் எண்ணிக்கை யாது?
24. 30 நாள்கள் நடைப்பயணத்திற்குப் பிறகு, நான் 4800 கலோரிகள் இழந்திருந்தேன். என் கலோரி இழப்பு சீரானது எனில், ஒரு நாளில் இழந்த கலோரியை காண்க.
25. ஆழ்துளைக் கிணறு தோண்டும் வேலையாட்கள், ஒரு நாளில் 22 அடிகள் துளையிடுகிறார்கள். எனில் 110 அடிகள் ஆழத்திலுள்ள நீரோட்டத்தை அடைய எத்தனை நாட்கள் ஆகும்?
26. பரப்பளவு 368 ச.செமீ மற்றும் அடிப்பக்கம் 23 செமீ அளவுகள் கொண்ட இணைகரத்தின் உயரம் காண்க.
27. பரப்பளவு 828 ச.செமீ உம், இணைப்பக்க அளவுகள் 19.6 செ.மீ, 16.4 செ.மீ உம் கொண்ட சரிவகத்தின் உயரத்தை காண்க.
28. பின்வருவனவற்றின் எண்கெழுக்களைக் காண்க.
    -3xy, 12k, y, 121bc, -x, 9pq, 2ab
29. ஒரு புள்ளியில் x°, 2x°, 3x°, 4x° மற்றும் 5x° ஆகிய கோணங்கள் அமைந்துள்ளன. மிகப்பெரிய கோணத்தின் மதிப்பைக் காண்க.

***/***

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com